**காய்கறிகளுக்கான விலை முன்னறிவிப்பு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது, தக்காளி, கத்திரி மற்றும் வெண்டை ஆகிய காய்கறிகளுக்கான விலை முன்னறிவிப்பை வழங்குகிறது. தக்காளி, கத்திரிக்காய் மற்றும் வெண்டைக்காய் உற்பத்தி மற்றும் பயன்பாட்டில் தமிழகம் முக்கிய இடம் வகிக்கின்றது.

**தக்காளி**

வேளாண் மற்றும் விவசாய நல அமைச்சகத்தின் மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீட்டின்படி (2021-22), தமிழகத்தில் தக்காளி சுமார் 0.54 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு 16.18 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திண்டுக்கல், திருப்பூர், கோயம்புத்தூர், தேனி, நாமக்கல் மற்றும் திருவண்ணாமலை ஆகியவை தக்காளி உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும். தற்போது கோவை மொத்தவிலை சந்தைக்கு தக்காளி இராயகோட்டை, கிருஷ்ணகிரி, கோவை சுற்றுவட்டார கிராமங்களான பெரியநாயக்கன்பாளையம், கிணத்துக்கடவு, மாதம்பட்டி, தொண்டாமுத்தூர், நாச்சிபாளையம், சாவடி, உடுமலைபேட்டை, தாராபுரம் மற்றும் கர்நாடக மாநிலம் மைசூர் பகுதிகளிலிருந்து வருகின்றது.

**கத்திரி**

வேளாண்மை மற்றும் விவசாய நல அமைச்சகத்தின் மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீட்டின்படி (2021-22), கத்திரி 0.24 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 3.13 இலட்சம் டன்கள் உற்பத்திசெய்யப்படுவதாக அறியப்படுகிறது. தமிழகத்தில், தர்மபுரி, சேலம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, திண்டுக்கல், நாமக்கல், ராணிபேட்டை

மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் கத்திரி அதிக அளவில் உற்பத்தி செய்யபடுகின்றது. வர்த்தக மூலங்களின்படி, தற்போதைய வரத்து மாதம்பட்டி, ஆலந்துறை, நாச்சிபாளையம், குப்பனூர், தொண்டாமுத்தூர் மற்றும் பூலுவபட்டி ஆகிய பகுதிகளிலிருந்து வருகின்றது.

**வெண்டை**

வேளாண்மை மற்றும் விவசாய நல அமைச்சகத்தின் மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீட்டின்படி (2021-22), வெண்டை 0.25 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 2.41 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுவதாக அறியப்படுகிறது. தமிழகத்தில் தர்மபுரி, சேலம், ஈரோடு, திருவண்ணாமலை, கள்ளகுறிச்சி, இராணிபேட்டை, திருப்பத்தூர், திருவள்ளூர், கோயம்புத்தூர், மதுரை, வேலூர், திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் வெண்டை அதிக அளவில் உற்பத்தி செய்யபடுகின்றது. வர்த்தக மூலங்களின்படி, தற்போது, கோயம்புத்தூர் சந்தைக்கு வெண்டை வரத்தானது மாதம்பட்டி, ஆலந்துறை, நாச்சிபாளையம், குப்பனூர், தொண்டாமுத்தூர் மற்றும் பூலுவபட்டி பகுதிகளிலிருந்து வருகின்றது.

விலை முன்னறிவிப்பு திட்டக்குழு, ஒட்டன்சத்திரம் மற்றும் கோயம்பத்தூர் சந்தையில் கடந்த 12 ஆண்டுகளாக நிலவிய தக்காளி, கத்திரி மற்றும் வெண்டை விலையில் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. பொருளாதார ஆய்வு முடிவின்படி, அறுவடையின் போது (மே 2023) தரமான தக்காளியின் பண்ணைவிலை கிலோவிற்கு ரூ.24 முதல் 27 வரை, நல்ல தரமான கத்திரியின் விலை ரூ.22 முதல் 27 ஆகவும் மற்றும் தரமான வெண்டையின் விலை ரூ.26 முதல் 28 வரை இருக்கும் என்று அறியப்படுகிறது. மேலும், கோடை காலம் என்பதால் விலை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே விவசாயிகள் அதற்கேற்ப சந்தை முடிவு எடுக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்- 641 003
தொலை பேசி – 0422 – 2431405

இயக்குனர் மற்றும் முனைஅதிகாரி
தமிழ்நாடு நீர்வளநிலவளத் திட்டம்
நீர் நுட்ப மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்- 641 003
தொலை பேசி – 0422 – 6611278

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
காய்கறிப் பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்- 641 003
தொலை பேசி – 0422 – 6611374

## Price Forecast for Vegetables

The TN-IAM Project funded Price Forecasting Scheme being operated in the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University, Coimbatore has developed market advisory for vegetables. Tamil Nadu is the major producer and consumer of tomato, brinjal and bhendi.

### Tomato

According to the Third Advance Estimate of Ministry of Agriculture and Farmer Welfare (2021-22), the area under tomato cultivation is 0.54 lakh hectares with production of 16.18 lakh tons in Tamilnadu. The major tomato producing districts in Tamilnadu are Dharmapuri, Krishnagiri, Salem, Dindigul, Tiruppur, Coimbatore, Theni, Namakkal and Thiruvanmalai. At present, tomato arrivals to Coimbatore wholesale market, are coming from Rayakottai, Krishnagiri, surrounding villages especially Periyanaickenpalayam, Kinathukadavu, Mathampatti, Thondamuthur, Natchipalayam, Chavadi, Udumalpet and Dharapuram of Tamilnadu and also from Mysore region of Karnataka.

### Brinjal

According to the Third Advance Estimate of Ministry of Agriculture and Farmer Welfare (2021-22), the area under brinjal is 0.24 lakh hectares with a production of 3.13 lakh tons in Tamilnadu. The major producers of brinjal in Tamilnadu are Dharmapuri, Salem, Tiruvannamalai, Kallakurichi, Dindigul, Namakkal, Ranipet and Vellore districts. As per trade sources, current arrivals are coming from Mathampatti, Alandurai, Natchipalayam, Kuppanoor, Thondamuthur and Pooluvapatti.

**Bhendi**

According to the Third Advance Estimate of Ministry of Agriculture and Farmer Welfare (2021-22), Bhendi area under cultivation in Tamilnadu is 0.25 lakh hectares with production of 2.41 lakh tons. The major producers of bhendi in Tamilnadu are Dharmapuri, Salem, Erode, Thiruvanamalai, Kallakurichi, Ranipet, Tirupattur, Thiruvallur, Coimbatore, Madurai, Vellore, Dindigul and Theni districts. As per the trade sources, most of bhendi arrivals are coming from Mathampatti, Natchipalayam, Alandurai, Kuppanoor, Thondamuthur, Pooluvapatti.

The Price Forecasting Scheme team has analyzed the past 12 years prices of tomato, brinjal and bhendi that prevailed in Oddanchathiram and Coimbatore Uzhavar shandies. As per the results of the analysis, the farm gate price of good quality tomato during harvest (May’2023) would be around Rs. 24-27 per kg. Farm gate prices of good quality brinjal will rule around Rs. 22-24 per kg and bhendi will rule around Rs. 26-28 per kg respectively and the price may go up due to summer season. Hence, farmers are advised to take appropriate marketing decision accordingly.

***For Marketing information details contact:***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies (CARDS)*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003*
*Phone: 0422-2431405*

*The Director and TN-IAMP Nodal Officer*
*Water Technology Centre*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003*
*Phone: 0422-6611278*

***For Technical Details please contact:***

*Professor and Head*
*Department of Vegetable crops*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore-641003*
*Phone: 0422-6611374*